நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்10 .12.2018

2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10.12.2018ம் தேதி திங்கள்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.சு.சௌந்தரராஜன்.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)**இந்நகராட்சிக்கு அரசு ஆணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன்படி 270 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவைப்படுவதில் தற்போது 67 பணியாளர்கள் மட்டுமே உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் Out sourcing முறையில் பணியமர்த்தி நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி கோரப்பட்டது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.28369/J3/2018, நாள்.22.11.2018ல் 50 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக Out sourcing முறையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தி மூன்றாண்டு காலத்திற்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே பொதுசுகாதாரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.73.00 இலட்சத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1)ஒப்புதல் அளிக்கலாம்,

**2)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 50 துப்பரவு பணியாளர்களை தனியார் வாயிலாக out sourching முறையில் பணியமர்த்தவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும், அது தொடர்பான விளம்பர செலவினங்களுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.5086/2018/எச்2)**

**தீர்மான எண்: 287 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2)**இந்நகராட்சிப் பகுதியில் தினந்தோறும் சுமார் 33 மெட்ரிக்டன் குப்பை சேகரம் செய்யப்பட்டு நகரில் இருந்து 10கி.மீ தொலைவில் உள்ள சிறைக்காடு உரக்கிடங்கில் சேகரம் செய்யப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மை –விதி2016 குறிப்பிட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி மக்கும், மக்காத குப்பைகளை தரம் பிரித்து கையாண்டு உரம் தயார் செய்ய பசுமை உரக்குடில் (Decendralized Micro Compost Plant) மையங்கள் அமைக்க நகராட்சிப் பகுதியில் 4 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு (மயானக்கரை சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கு(கிழக்கு), 2. அசோக்நகர் லேஅவுட், 3.குலசேகர பாண்டியன் லேஅவுட் 4. மயானக்கரை சாலையின் உள்ள பழைய உரக்கிடங்கு (மேற்கு)) 4 இடங்களில் அமைக்க மொத்தம் ரூபாய் 272.00 லட்சம் மதிப்பீட்டில் கருத்துரு அனுப்பப்பட்டு பார்வை1ல் காணும் நகராட்நி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேற்படி பணிகளுக்கு பார்வை 2ல் காணும் நகராட்சி நிர்வாக முதன்மைப் பொறியாளர் சென்னை அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டு பார்வை 3ல் காணும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பார்வை 4ல் காணும் நாளில் கீழ்க்காணும் பட்டியலில் உள்ள வேலை ஆணை வழங்கப்பட்டது.

| வ. எண் | பணி விபரம் | தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மயானக்கரை சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கில்(கிழக்கு) நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் அமைத்தல் | 68.00 |
| 2. | அசோக் நகர் லேஅவுட்டில் நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் அமைத்தல் | 68.00 |
| 3. | குலசேகரபாண்டிய லேஅவுட்டில் நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் அமைத்தல் | 68.00 |

| | | |
|---|---|---|
| 4. | மயானக்கரை சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கில் (மேற்கு) நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் அமைத்தல் | 68.00 |
| | மொத்தம் | 272.00 |

மேற்காணும் பணிகளுக்கு 17.10.2018 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.

வரிசை 1 (ம) 4ல் மயானக்கரை சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கில் (கிழக்கு (ம) மேற்கு) பணிகள் நடைபெற்று கொண்டுள்ளது.
வரிசை எண் 2 (ம) 3ல் அசோக் நகர் லேஅவுட் (ம) குலசேகர பாண்டியன் லேஅவுட் பணி துவங்கப்பட்டது. இந்நிலையில் அப்பகுதி பொதுமக்கள் கடும் ஆட்சேபணை செய்வதை தொடர்ந்து பணி நிறுத்தப்பட்டது. மேற்காணும் பணி தொடர்பாக அப்பகுதி பொதுமக்களிடம் சமரசம் பேச்சு மேற்கொண்டும், தீர்ப்பு ஏற்படாமல் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் வரிசை எண் 2 (ம) 3 அசோக்நகர் லேஅவுட் (ம) குலசேகர பாண்டியன் லேஅவுட் இடத்திற்கு மாற்றாக மயானக்கரை சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கில் போதுமான இடவசதி இருப்பதால் அங்கு இரண்டு நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் அமைக்கவும்,அதற்கு அனுமதிக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு முன்மொழிகள் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:2216/18/இ1)

**தீர்மான எண்: 288 அனுமதிக்கப்பட்டது.**

**3)**இந்நகராட்சியிலுள்ள தெருவிளக்குகளை மூன்று ஆண்டுகளுக்கு முழுமையாக தனியார் மூலம் பராமரிக்க சென்னை நகராட் நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடித எண்.13899/2016/டிஒ1, நாள்.12.01.2017ன்படி கொள்கை ரீதியான ஒப்புதல் பெறப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.375, நாள்.12.01.2017ன்படி அனுமதி வழங்கப்பட்டு, 26.02.2018 முதல் மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், தேனி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு நல்ல முறையில் தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் இப்பணி 28.02.2019 உடன் ஓராண்டு முடிவடைகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனம் தனது 03.12.2018ம் தேதிய கடிதத்தில் தொடர்ந்து ஓராண்டிற்கு இப்பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கக் கோரி கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம் தொடர்ந்து நல்ல முறையில் பராமரித்து வருவதாலும், பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்களை உடன் சரிசெய்து வருவதாலும் மேற்படி கடிதத்தினை பரிசீலனை செய்து மேலும் ஓராண்டிற்கு இப்பணியினை நீட்டிப்பு செய்துதரவும், மேலும் இப்பணிக்கான செலவினம் ரூ.39.37/— இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை 26.02.2018 முதல் மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், தேனி நிறுவனத்தின் மூலம் நல்ல முறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் கூறும் குறைகள் உடனுக்குடன் சரிசெய்து தெருவிளக்குகள் எரிய வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் மீது எவ்வித புகார்களும் இதுவரை பெறப்படவில்லை. இந்நிறுவனத்திற்கு இதுவரை இப்பணி தொடர்பான குறைகளை தெரிவித்து குறிப்பாணைகளோ, அபராதமோ நகராட்சி மூலம் வழங்க மற்றும் விதிக்கப்படவில்லை. எனவே இந்நிறுவனத்தின் பணிகள் சிறப்பாக குறைபாடின்றி உள்ளதால் மேலும் ஓராண்டிற்கு நீடிப்பு செய்து அனுமதி வழங்கக் கோரி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6708/2016/இ1)

**தீர்மான எண்: 289 அனுமதிக்கப்பட்டது.**

**4)**இந்நகராட்சி 179 சிறுமின் விசை பம்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது பழுதுகள் ஏற்படுவதால் அவற்றிற்குப் பதிலாக மாற்று மின் மோட்டார் பொருத்தவும்,

பழுதடைந்த தொட்டிகள் பழுது சரிசெய்யவும் கீழ்க்கண்ட பொருட்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,60,000/– குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. (15 x 25) நீர்மூழ்கி மின்மோட்டார்கள் –––– 10 எண்ணம்
2. Single phase பேனல் போர்டு –––– 10 எண்ணம்
3. 1000லிட்டர் HDPE தொட்டிகள் ––– 10 எண்ணம்

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.7160/2018/இ1)

**தீர்மான எண்: 290 அனுமதிக்கப்பட்டது.**

**5)**திரு.L.எல்லப்பன், ஒப்பந்ததாரர் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகைகள் திரும்ப வழங்க கோரியுள்ளார். இந்தத் தொகை மூன்றாண்டுகளுக்கு மேல் ஆனதாலும், காலம் கடந்த வைப்புத்தொகையாகி விட்டதாலும் கலம் 3ல் மற்றும் 4ல் கண்ட விபரப்படியுள்ள காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.3,32,730/–ல் ரூ.75,000/– தணிக்கை தடைக்காக ஈடு செய்தது போக எஞ்சிய தொகை ரூ.2,57,730/–ஐ தனியருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | நாள் (2) | பக்க எண் வரிசை எண் (3) | தொகை ரூ.(4) | தணிக்கைக்கு ஈடு செய்யும் தொகை ரூ.(5) | மீதத் தொகை ரூ..6) |
|---|---|---|---|---|---|
| 1 | 18.03.2014 | 6/79 | 3500 | - | 3500 |
| 2 | 11.12.2013 | 4/40 | 3500 | - | 3500 |
| 3 | 30.10.2014 | 13/205 | 2000 | - | 2000 |
| 4 | 14.11.2014 | 13/209 | 4000 | - | 4000 |
| 5 | 27.01.2015 | 14/239 | 25000 | 25000 | - |
| 6 | 27.01.2015 | 14/242 | 500 | - | 500 |
| 7 | 13.03.2015 | 15/262 | 2000 | - | 2000 |
| 8 | 26.03.2015 | 16/271 | 4000 | - | 4000 |
| 9 | 27.03.2015 | 16/273 | 2500 | - | 2500 |
| 10 | 27.03.2015 | 16/275 | 1500 | - | 1500 |
| 11 | 20.10.2014 | 17/293 | 48040 | 48000 | 40 |
| 12 | 07.05.2015 | 19/331 | 63570 | - | 63570 |
| 13 | 01.07.2015 | 21/353 | 2000 | 2000 | - |
| 14 | 27.08.2015 | 23/395 | 4500 | - | 4500 |
| 15 | 28.10.2015 | 24/425 | 2750 | - | 2750 |
| 16 | 22.11.2015 | 27/489 | 5000 | - | 5000 |
| 17 | 11.12.2016 | 29/529 | 3500 | - | 3500 |
| 18 | 01.03.2016 | 29/544 | 35526 | - | 35526 |
| 19 | 01.03.2016 | 29/545 | 8250 | - | 8250 |
| 20 | 02.03.2016 | 30/546 | 40207 | - | 40207 |
| 21 | 02.03.2016 | 30/547 | 21430 | - | 21430 |
| 22 | 22.03.2016 | 30/566 | 41207 | - | 41207 |
| 23 | 22.03.2016 | 30/567 | 8250 | - | 8250 |
| | | மொத்தம் | **332730** | **75000** | **257730** |

**அலுவலகக் குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 6614/2018/பி3)

**தீர்மான எண்: 291அனுமதிக்கப்பட்டது.**

**6)**இந்நகராட்சி வார்டு–13ல் சர்வே எண்.807 முதல் 810 வரை உள்ள இடங்கள் நகராட்சிக்கு சொந்தமான இடமாகும். மேற்படி இடத்தில் நகராட்சியால் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களும், மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் ஆக்கிரமிப்பாளர்களும் நகராட்சி இடத்தில் பட்டா வழங்கக் கோரி திரு.J.மாதவன், மாநில ஒருங்கிணைப்பாளர், தேசிய SC/ST மக்கள் சம்மேளனம் என்பவர் சென்னை

உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நகராட்சி ஆணையரை 4ஆம் பிரதிவாதியாக வழக்கு எண். WP(MD)No: 24136/2018—ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் திரு.எம்.கருப்பசாமிபாண்டியன், அரசு வழக்கறிஞர் நகராட்சி சார்பாக ஆஜராகி எதிர்வழக்காடவும், வாதுரை தாக்கல் செய்யவும், திரு.எம்.கருப்பசாமிபாண்டியன் அவர்களிடமிருந்து வாதுரைக் கட்டணமாக ரூ.9,500/—ஐ வழங்கக் கோரி 14.12.2018ல் கேட்பு வரப்பெற்றுள்ளதின் பேரில், மேற்கண்ட தொகை ரூ.9,500/—ஐ பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 7318/2018/எப்1)

**தீர்மான எண்: 292 அனுமதிக்கப்பட்டது.**

**7)**இந்நகராட்சியில் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலைக வளாகத்தில் உள்ள MPS —ல் உள்ள 60 HP மின்மோட்டார்கள் MCCB/250 A பழுது அடைந்து இருப்பதால் புதிதாக வாங்கி பொருந்துவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 40,000/—ஐ குடிநீர் மற்றும் புதைவடிகால் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும்,மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:7476/18/இ1)

**தீர்மான எண்: 293 அனுமதிக்கப்பட்டது.**

**8)**இந்நகராட்சி 2018—19ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத்திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள உரிய ஒப்பந்தப்புள்ளி மாநில அளவில் ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ் நாளிதழில் அனைத்து பதிப்புகளிலும் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் மூலம் விளம்பரம் செய்ததற்க்கான விளம்பரக் கட்டணம் ரூ.55,283/—ஐ வழங்கக் கோரி பொது மேலாளர், அக்கார்டு அட்வர்ட் டைசிங் ஏஜென்சிஸ், சென்னை பட்டியல் எண். AAA/0556/18—19, நாள்.08.09.2018 வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணத் தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.2666/2018/இ1)

**தீர்மான எண்: 294 அனுமதிக்கப்பட்டது.**

**9)**இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் இராண்டாம் நிலை குப்பை சேகரம் செய்ய பேட்டரி முலம் இயங்கும் வாகனம் (BOV)20 எண்ணம் விநியோகம் செய்தல் பணிக்கு உரிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை தென்னிந்திய அளவில் ஆங்கில நாளிதழ் ஒன்றிலும்,தமிழக நாளிதழ் ஒன்றிலும், அனைத்து பதிப்புகளிலும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் மூலம் விளம்பரம் செய்ததற்க்கான விளம்பரக் கட்டணம் ரூ.56,438/—ஐ வழங்கக் கோரி பொது மேலாளர், அக்கார்டு அட்வர்ட் டைசிங் ஏஜென்சிஸ், சென்னை பட்டியல் எண். AAA/0556/18—19, நாள்.08.09.2018 வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணத் தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.2216/2018/இ1)

**தீர்மான எண்: 295 அனுமதிக்கப்பட்டது.**

**10)**இந்நகராட்சி 2018-19-ம் ஆண்டு CSR FUND தனியார் மூலம் சமூக நல சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள உரிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை தென்னிந்திய அளவில் ஆங்கில நாளிதழ் ஒன்றிலும்,தமிழக அளவில் ஒரு தமிழ் நாளிதழ் அனைத்து பதிப்புகளிலும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்செயலகம்,

சென்னை அவர்களின் மூலம் விளம்பரம் செய்ததற்க்கான விளம்பரக் கட்டணம் ரூ.57,383/–ஐ வழங்கக் கோரி பொது மேலாளர், அக்கார்டு அட்வர்ட் டைசிங் ஏஜென்சிஸ், சென்னை பட்டியல் எண். AAA/0735/18–19, நாள்.11.10.2018 வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணத் தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.3248/2018/இ1)

**தீர்மான எண்: 296 அனுமதிக்கப்பட்டது.**

**11)**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் TN 60 AY1176 இல் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்ய 22/10/2018 அன்று விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற கீழ்கண்டவாறு விலைப்புள்ளி மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது,

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | K.M.A. மோட்டார்ஸ், திண்டுக்கல். | 51,200/- |
| 02 | ஸ்ரீ பாலாஜி ஆட்டோ மொபைல்ஸ், மதுரை. | 47,200/- |
| 03 | பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ், பெரியகுளம். | 44,300/- |

அலுவலகக் குறிப்பு:- 1.வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:6218/2018/H2**

**தீர்மான எண்: 297 மெஸர்ஸ் பாண்டியன் ஆட்டோமொபைஸ், பெரியகுளம் அவர்களது குறைந்த விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**12)**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் TN 60 S 2049 இல் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்ய 22/10/2018 அன்று விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற கீழ்கண்டவாறு விலைப்புள்ளி மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது,

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | K.M.A. மோட்டார்ஸ், திண்டுக்கல். | 27,300/- |
| 02 | ஸ்ரீ பாலாஜி ஆட்டோ மொபைல்ஸ், மதுரை. | 25,800/- |
| 03 | பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ், பெரியகுளம். | 24,700/- |

**அலுவலகக் குறிப்பு:-** 1.வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை வழங்கிய பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:6460/2018/H2**

**தீர்மான எண்: 298 மெஸர்ஸ் பாண்டியன் ஆட்டோமொபைஸ், பெரியகுளம் அவர்களது குறைந்த விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**13)**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் TN 60 S 4741 க்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதிசான்று பெறுவதற்கும் ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூபாய் 1,50,000/- ஐ இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**தீர்மான எண்: 299 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:7258/2018/H2**

**14)**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் TN 60 S 5118(காம்பாக்டர் லாரி) இல் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதிசான்று பெறுவதற்கும் அதற்கான உத்தேச செலவீனம் ரூபாய் 1,50,000/- ஐ இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**தீர்மான எண்: 300 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:7051/2018/H2**

**15)**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் புல்வெட்டும் கருவி 5 எண்ணம் வாங்கப்பட்டுள்ளது. டிசம்பர் 2018/முதல் ஏப்ரல் 2019 வரையிலான 5 மாத காலங்களுக்கு மேற்கண்ட புல்வெட்டும் கருவிகளுக்கு,தோராயமாக 900 லிட்டர் எரிபொருள் போட வேண்டியிருக்கும் என்பதால் ஏற்கனவே இந்நகராட்சி வாகனங்களுக்கு M/S தேவராஜ் பெட்ரோல் பங்க் -ல் போடப்பட்டு வருவதால் மேற்கண்ட புல்வெட்டும் கருவிகளுக்கு அவற்றை இயக்கத்தேவைப்படும் எரிபொருளை மேற்கண்ட M/S தேவராஜ் பெட்ரோல் பங்கிலேயே நிரப்பவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:6395/2018/H2**

**தீர்மான எண்: 301 புல்வெட்டும் கருவிகளை இயக்குவதற்குத் தேவையான எரிபொருளை M/s. தேவராஜ் பெட்ரோல் பங்க் வாயிலாக தொடர்ந்து வாங்கி உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.**

**16)**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் முதிர்ந்த கொசுக்களை அழிக்கப்பயன்படுத்தி வரும் Pyrethram-2% Extract (பைரத்திரம்) மருந்து கையிருப்பு 178-லிட்டர் மட்டும் உள்ளது. இது 40 தினங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்பதாலும், மாவட்ட பூச்சியியல் நிபுனர் அவர்களின் அறிவுறுத்தலின் படி 6 மாத காலத்திற்கு தேவையான மருந்து கையிருப்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதாலும்,மேற்கொண்டு 700 லிட்டர் மருந்து அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து நேரடி கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7,50,000/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**தீர்மான எண்: 302 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:7459/2018/H2**

**17)**இந்நகராட்சி சாந்திவனம்- மயானத்தில் செடிகள் மற்றும் புதர்களை அதிகம் வளர்ந்துள்ளதால் அதனை அகற்ற 26/11/2018 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரபெற்று அவை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது,

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | ராஜா எர்த் மூவர்ஸ்,போடிநாயக்கனுார். | 825/- |
| 02 | அஸ்வினி எர்த் மூவர்ஸ்,போடிநாயக்கனுார். | 840/- |
| 03 | காமாட்சியம்மாள் எர்த் மூவர்ஸ்,இராசிங்காபுரம். | 800/- |

**அலுவலகக் குறிப்பு:-**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை வழங்கிய காமாட்சியம்மாள் எர்த் மூவர்ஸ்,இராசிங்காபுரம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:6460/2018/H2**

**தீர்மான எண்: 303 மெஸர்ஸ் காமாட்சியம்மாள் எர்த் மூவர்ஸ், இராசிங்காபுரம் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**18)**இந்நகராட்சி சாந்திவனம்- மயானத்தில் செடிகள் மற்றும் புதர்கள் அதிகம் வளர்ந்துள்ளதால் இறந்தவர்களின் உடல்களை புதைக்க இடமில்லாத காரணத்தால் பொதுசுகாதாரடததின் அவசர அவசியம் கருதியும் இந்நகராட்சியின் JCB இயந்திரம் வஞ்சிஓடையை சுத்தம் செய்யும் பணியில் உள்ளதாலும் தனியார் மூலம் வாடகை அடிப்படையில் JCB மூலம் மேற்கண்ட பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 304 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு:**-மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:6996/2018/H2**

**19)**இந்நகராட்சியில் 10 எண்ணம் கணினிகள் MERCURY SOFTWARE,Periyakulam நிறுவனத்தார் மூலம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு 8.12.2017 முதல் 7.12.2018 வரை பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.மேலும் ஆண்டு பராமரிப்பு நீட்டிப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:7425/2018/E1**

**தீர்மான எண்: 305 அனுமதிக்கப்பட்டது.**

**20)**இந்நகராட்சியில் தேர்தல்பிரிவில் பயன்படுத்தப்படும் Ricoh Xerox Cum Drum Kit,Developer Kit மற்றும் Blade மாற்றப்பட வேண்டும் என்பதால் இவைகள் Consumable iteamத்தில் வருவதால் AMC கீழ் நீக்கம் செய்ய இயலாது என்பதால் அவசர அவசியம் கருதி உடன் சரி செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.12,000/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்7424/2018/E1**

**தீர்மான எண்: 306 அனுமதிக்கப்பட்டது.**

**21)**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் Jcb வாகனத்திற்கும் Bolero Jeep க்கும் ஒரே ஓட்டுநர் இயக்கிவருவதால் பொது சுகாதார பணிகளை உடன் செய்திட மன்றத்தின் முன் அனுமதியை ஏற்று Jcb வாகனத்திற்கு தனியாக, தனியார் நிறுவனங்களிடம் இருந்து ஒரு ஓட்டுநரை பணியமர்த்த 17.09.2018 அன்று விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | சங்கர் இன்ஜினியரிங் சென்னை | **502**/ஒருநாள் |
| 02 | அவர் லேண்ட இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பி,லிமிடட் சென்னை | **506**/ஒருநாள் |

**அலுவலகக் குறிப்பு:-**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை வழங்கிய சங்கர் இன்ஜினியரிங், சென்னை நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:5097/2018/H2**

**தீர்மான எண்: 307 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**22)** இந்நகராட்சி உரக்கிடங்குகளில் உருவாக்கக்கூடிய செல்பூச்சி போன்ற பூச்சிகளால் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஒவ்வாமை ஏற்படுவதாலும், இந்நகராட்சி கட்டிடங்களும் இவ்வகையான

பூச்சிகள் உருவாவதால் அங்குள்ள மரப்பலகைகளில் அரிப்பு ஏற்படுவதாலும் இவ்வகையான பூச்சிகளை உற்பத்தியாகாமல் தடுக்க தேவைப்படும் டிஓடிசன் மருந்து 700 லிட்டர் தனியாரிடமிருந்து கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றத்தின் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.7155/2018/எச்2)**

**தீர்மான எண்: 308 அனுமதிக்கப்பட்டது.**

**23)**இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதிகளில் 4 நுண்ணுயிர் உரக்கிடங்குகளும் 16 பார்க் Onsit Compostம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி உரக்கிடங்கிற்கு குப்பைகளை உரமாக்க பயன்படுத்தப்படும் EM Solution 500 லிட்டர் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.0 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றத்தின் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.7102/2018/எச்2)**

**தீர்மான எண்: 309 அனுமதிக்கப்பட்டது.**

**24)**இந்நகராட்சிக்கு தேவையான Lemon Cross மருந்து 350 லிட்டர் விநியோகம் செய்வதற்கு 27.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி கீழ்க்கண்டவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஆதனை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | தொகை ரூ. (ஒரு லிட்டர்) |
|---|---|---|
| 01 | Sivasakthi Traders Namakkal | Rs.2,775/- |
| 02 | Shree Plasto Tech Chennai | Rs.2,800/- |

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு :**<br><br>**(ந.க.எண்.7154/2018/எச்2)** | 1. வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த தொகை வழங்கிய Sivasakthi Traders. (Namakkal) என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அந்நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம் |

**தீர்மான எண்: 310 மெஸர்ஸ் சிவசக்தி டிரேடர்ஸ், நாமக்கல் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**25)**இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த இரும்பு பொருட்களை ஏலம் விடுவதற்கு ஏலஅறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் வெளியிட்டமைக்கு மதுரைமணி செய்தி நாளிதழ் பட்டியல் தொகை ரூ.18432/– செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 6747/2018/இ1)**

**தீர்மான எண்: 311 அனுமதிக்கப்பட்டது.**

**26)**நகராட்சி நவீன எரிவாயு தகன மேடையில் Fire Works மற்றும் சிறு மராமத்து பணி செய்வதற்கு **5.12.2018**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு.M/S.SS Engnieering Works
   Chennai
2. திரு. M/S.Evershine PEB and Roofing System
   Chennai.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் ஒப்பந்தப்புள்ளியில் கோரியபடி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் சரிபார்க்கப்பட்டு, தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி நவீன எரிவாயு தகன மேடையில் சிறு மராமத்து அமைக்கும் பணி | ரூ.10 இலட்சம் | திரு.M/S.SS Engnieering Works Chennai. . | 0.94% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு.M/S.Evershine PEB and Roofing System Chennai. | 38.69% மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள திரு.M/S.SS Engnieering WorksChennai என்பவரிடம் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு பேரப்பேச்சு நடத்தியதில் சந்தையில் கட்டுமான பொருட்களில் விலை மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதாலும், கட்டுமான பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாலும் விலைவிகிதத்தினை குறைக்க இயலாது என தெரிவித்துவிட்டார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக 0.94% வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு..M/S.SS Engnieering WorksChennai என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை இப்பணியின் முக்கியத்துவம் கருதி ஏற்கலாம். இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.263, நாள்.31.10.2018ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**(ந.க.எண்: 6715/2018/இ1)**

**தீர்மான எண்: 312 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**27)**போடிநாயக்கனூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வார்டு வரையிலான பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் நகராட்சி குத்தகை இனங்களுக்கு 2018—2019ம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் குத்தகை இனங்களுக்கான வாடகை தொகையினை பொதுமக்கள் உடன் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள அறிவுறுத்தும் வகையில் ஆட்டோவில் ஒலிபெருக்கி மூலமும், தனியார் தொலைக்காட்சி மூலமாகவும் விளம்பரம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:7089 /2018/அ1)**

**தீர்மான எண்: 313 அனுமதிக்கப்பட்டது.**

**28)**போடிநாயக்கனூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் பின்கள் தேவைப்படுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. திரு.Southern Solid Waste Management,
   Kanniyakumari.

2. திரு.STEVEWIN Associates,
   Kanniyakumari.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் சரிபார்க்கப்பட்டு, தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் பின்கள் | ரூ.10,00,000/- | திரு.Southern Solid Waste Management, Kanniyakumari. | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.STEVEWIN Associates, Kanniyakumari. | 9.24 % மதிப்பீட்டை விட கூடுதல் |

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு :**<br><br>**(ந.க.எண்:7032/2018/இ1)** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.07% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.Southern Solid Waste Management,Kanniyakumari ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம் |

**தீர்மான எண்: 314 மெஸர்ஸ் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட், கன்னியாகுமாரி என்கின்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**29)** போடிநாயக்கனூர் நகராட்சியில் பாதாளசாக்கடைத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அத்தொட்டிகளுக்கு மேன்ஹோல் மூடி புதிதாக 20 எண்ணம் வாங்குவதற்கு கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1. திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர்
   போடிநாயக்கனூர்.
2. திரு. P.நடராஜன், ஒப்பந்தாரர்
   போடிநாயக்கனூர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியபடி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் சரிபார்க்கப்பட்டு, தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | பாதாள சாக்கடை மேன்ஹோல் மூடி புதிதாக 20 எண்ணம் வாங்குவதற்கான பணிகள் | ரூ.56,000/- | திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர். | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. P.நடராஜன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர். | 0.22% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** ந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.04%குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்: 562/2018/இ1)**

**தீர்மான எண்: 315 திரு. எல். எல்லப்பன், ஒப்பந்ததாரரது குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**30)**போடிநாயக்கனூர் நகராட்சியில் குடிநீர் ஆதாரமான கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணையில் இருந்து மணல் வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள திரவினை மூடுவதற்கு பயன்படுத்தப்பட்ட மரக்கட்டைகள் புதிதாக அமைப்பதற்கு கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1. திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர்
   போடிநாயக்கனூர்.
2. திரு. P.நடராஜன், ஒப்பந்தாரர்
   போடிநாயக்கனூர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் சரிபார்க்கப்பட்டு, தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் குடிநீர் ஆதாரமான கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணையில் இருந்து மணல் வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள திரவினை மூடுவதற்கு பயன்படுத்தப்பட்ட மரக்கட்டைகள் பணி | ரூ.50,000/- | திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர். . | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. P.நடராஜன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர். | 0.21% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.03%குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்: 6810/2018/இ1)**

**தீர்மான எண்: 316 திரு. எல். எல்லப்பன், ஒப்பந்ததாரரது குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**31)**போடிநாயக்கனூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் மராமத்துப்பணி செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர்
   போடிநாயக்கனூர்.
2. திரு. P.நடராஜன், ஒப்பந்தாரர்
   போடிநாயக்கனூர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் சரிபார்க்கப்பட்டு, தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய மராமத்துப்பணி | ரூ.2,00,000/– | திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர். | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. P.நடராஜன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர். | 0.73% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.L.எல்லப்பன், ஒப்பந்தாரர் போடிநாயக்கனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
**(ந.க.எண்:6716/2018/இ1)**

**தீர்மான எண்: 317 திரு. எல். எல்லப்பன், ஒப்பந்ததாரரது குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**
**போடிநாயக்கனூர் நகராட்சி.**